but for other purposes, viz., to create and foster community sense, to build up character and health, inculcate discipline, self-help and mutual help, develop scientific attitudes and develop qualities of leadership. So apart from political complexions, these things are desirable qualities particularly in our youth. Therefore, these activities have been decided upon.

SRI R. KRISHNASAMI NAIDU : ஏற்கனவே கிராம நலத் திட்டம் அமுலில் உள்ள பகுதிகளிலே இளைஞர்கள் சங்கம் என்று ஏற்படுத்தி, ஆடு வளர்த்தல், கோழிப் பண்ணை வைத்தல், கூட்டு விவசாயம் செய்தல் முதலிய காரியங்களுக்காக என்று சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சங்கங்களும் அவற்றோடு இணைக்கப்படுமா அல்லது தனியாக அமைக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தச் சங்கங்கள் இந்தக் கிராம சேவக்கள் பயிற்சி பெறக்கூடிய நிலையங்களுக்குப் பக்கத்திலே, கிராம சேவகர்களுக்கு இம்மாதிரி சங்கங்கள் அமைப்பதிலே பயிற்சி கொடுப்பதற்காக ஏற்படுத்தப்படுபவை. ஆகையால், அவைகளுக்கும் இப்பொழுதிருக்கும் சங்கங்களுக்கும் ஒன்றும் முறண்பாடு கிடையாது.

SRI A. A. RASHEED : Is rifle shooting taught at this youth club?

THE HON. SRI C. SUBRAMANIAM : There is no programme to teach rifle shooting or any other shooting here.

SRI S. LAZAR : Is there any fixed programme prescribed for this youth club and if so, will the Hon. Minister tell us what that programme is?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir, a programme has been fixed for these youth clubs and the following items have been included :—

(*a*) cultural and educational programmes, reading and discussing the contributions made by national leaders, radio listening groups;

(*b*) agricultural activities which will include individual and group projects such as sheep breeding, vegetable and fruit gardening, poultry, pig rearing, apiary, etc.,

(*c*) co-operative and collective activities, and

(*d*) service to the backward classes.

SRI P. U. SHANMUGAM : இந்தச் சங்கங்களில் சேருவதற்கு முன் வருகிற இளைஞர்களுக்கு தகுதி, திறமை ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : உண்மையிலேயே அவர்கள் இளைஞர்களாக இருக்கவேண்டும்.

Hill and Malaria Allowances

*62 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஜவ்வாது மலையிலிருக்கும் பாரஸ்டர், ரேஞ்சர் இவர்களுக்கு மலைவாச அலவன்ஸும் மலேரியா அலவன்ஸும் தரப்படுகிறதா ?

(ஆ) இல்லையாயின், காரணமென்ன ?

(இ) இதற்கு முன் தரப்பட்டிருந்ததா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) The Javadis is one of the localities deleted by the Government from the list of unhealthy localities.

(*c*) Yes.

SRI S. M. ANNAMALAI : கனம் அமைச்சர் அவர்கள் ஜவ்வாது மலைக்குச் சென்றுவந்த பிறகுதான் இந்த அலவன்ஸ் நிறுத்தப்பட்டது என்று கேள்விப்படுகிறேன். இது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது முன்னேயா பின்னேயா என்று எனக்குத் தெரியாது. ஆனால், இதற்கு நான் காரணம் அல்ல. சுகாதார இலாகா, "இது சுகாதாரமாகவே இருக்கிறது ; சுகாதாரத்திற்கு ஒன்றும் குறைவு இல்லை" என்று அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்ததால், அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தழுவி அலவன்ஸ் நீக்கப்பட்டிருக்கிறது.

SRI K. PONNIAN : தலைவர் அவர்களே, மலைப் பிரதேசங்களில் வாழும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கீழ் நாட்டிலிருந்துதான் உணவு வரவேண்டும். கீழ் நாட்டில் வாழ்க்கைப்புள்ளி அதிகமான சமயத்தில் அவர்களுக்குத் தனிச் சலுகையாவது கொடுத்து, அவர்களுக்கு மலைவாச அலவன்சும், "வார்ம்க்ளோதிங்" அலவன்சும் கொடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தக் கேள்வி மலைவாச ஸ்தலங்களில் சுகாதாரக் குறைவு இருப்பதால் அவர்களுக்குச் சில சலுகை கொடுக்கவேண்டும் என்பது. குளிர் அதிகமாக இருந்தால் அவர்களுக்கு குளிரைத் தவிர்ப்பதற்கு அவர்களுக்கு உடை அலவன்ஸ் கிடைக்கும். எதுவும் அந்தந்தப் பிராந்தியத்தைப் பொருத்தது. அந்த அந்தப் பிராந்தியத்திற்கு தகுந்த மாதிரி அலவன்ஸ் கொடுக்க அவசியம் இருக்கிறதா என்று பார்த்துத்தான் முடிவு செய்கிறார்கள்.

Public Schools

* 63 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there are any (English) public schools in the State other than the Lawrence School at Lovedale; and

(*b*) the nature of assistance given by the Government to such public schools?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) No grant is paid by the State Government to the institution at Lovedale.

SRI S. LAZAR : அதுபோன்று யாராவது பள்ளிக்கூடம் வைப்பதற்கு முன்வந்தால், சர்க்கார் அதற்கான ரிகக்னிஷன் கொடுக்குமா ? அப்படி முன்வருவோருக்கு ஏதாவது சலுகைகள் தருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பப்ளிக் ஸ்கூல்களை ஆதரிக்கவோ ஆரம்பிக்கவோ இந்தச் சர்க்காருக்கு உத்தேசம் இல்லை.